Registered No. M. 878.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 6 } 1915௵ ஆகஸ்டு௴ ராக்ஷஸ௵ ஆவணி௴ { பகுதி 4

அ. ரங்கசாமி ஐயர், B.A,B.L.,F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அ௵ 4.

மதுரை:

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.

100

## CONTENTS.


பக்கம்.

1. தற்கால நிலைமை--அ. ரங்கசாமி ஐயர். B.A., B.L., F.T.S. 105
From the Editor- A. Rangasamy Iyer. B.A., BL., F.T.S.

2. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், M. A. 113
Mera Bhai—R. Srinivasa Iyer. M. A.

3. ஸ்ரீதேவாபி மருதருகாத இரட்டைமணிமாலை: } M. வேதநாயக ஸ்வாமிகள். 120
Verses on Sri Devapi & Maru. } M. Vadanayga swamigal

4. குப்த வித்யை—C. W. லெட்பீடர் 125
Occultism—C. W. Leadbeater

5. சிறுவர்க்குரிய விஷயம்—ராகவன். 134
Children's Corner—Raghavan.

6. தியானக்கிரம விஷயம்—கே. எஸ். இராமச்சந்திர ஐயர். 137
Meditations—K. S. Ramachandra Iyer.

7. புத்தக வரவு. 148
Review of books.

8. சமாசாரம். 150
News.


---


## Ready for Sale.

*The English Translations of:—*

Thirty Minor upanishads Rs. 3-8-0
Laghu Yoga Vasishta Rs. 2-0-0
Professor Bergson & the Hindu Vedanta } Rs. 0-4-0
without postage.

The above Upanishads; except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq.**
Theosophical Society, Adyar Madras.

101

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 } 1915௵ ஆகஸ்டு௴ ராக்ஷஸ௵ ஆவணி௴ { பகுதி 4

## தற்கால நிலைமை.

சென்ற ஜூலை௴த்திலும் நிகழும் ஆகஸ்டு௴த்திலும் பிரசுரம் செய்யப்பட்ட 'தியாஸபிஸ்டு' என்ற பிரஹ்மக் ஞான பத்திரிகையில் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் இந்தியாவில் குப்தவித்தையை அப்பியஸிக்கின்ற ஒரு அந்தரங்க சபையைக் குறித்து (An Esoteric Organization in India.) வரைந்திருக்கின்றனர். சிஷர்களை ஞானயோக மார்க்கங்களில் செலுத்தி அவரவர்களுக்குரிய உபதேசங்களைச்செய்து அவர்கள் விகாஸமுறையில் மேற்செல்லுமாறு அவர்களுக்கு உதவிபுரியும் ரிஷிகளும் யோகிகளும் ஸித்தர்களும் இக்காலங்களிலும் உளரென்பது இந்துக்களிற் பெரும்பான்மையோரின் கொள்கையாகும். ஆகிலும் தற்காலத்தில் அவ்விதம் உதவிபுரிவதற்கு, ரிஷிகள் யோகிகள் ஸித்தர்கள் இவர்களது சங்கம் ஒன்று இக்காலத்திலும் இந்தியதேசத்தில் நடைபெற்று வருவதாகவும், இத்தேச

முழுமையிலும் அவர்களுடைய வழியைக் கடைப்பிடித்து தழுவுவோர்களின் சங்கியை சற்றேறக்குறைய ஆயிரமுள தென்றும், அவர்களது சம்பிரதாயம் பிராசீன காலமுதல் இத்தேசத்தில் கைக்கொண்டு வரப்படுகிறதென்றும், பிரஹ்மஞான சபையை ஒருவாறாகச் சார்ந்த ஈ. எஸ். என்ற குப்தஸபையின் தலைமை பூண்டவர் எவ்வாறு (White Brotherhood of Adepts) என்ற ரிஷிகளின் குழாத்தைச் சேர்ந்தவரோ, அதுபோல இப்பிராசீனசங்கத்தின் தலைமை அதிகாரிகளும் அந்த ரிஷிகளின் மன்றத்தைச் சார்ந்தவர்களென்றும் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களின் மேற்கூறிய இரண்டு வியாஸங்களால் தெரியவருகிறது.

***

இப்பிராசீன சங்கமானது தக்ஷிணமுகமென்றும், உத்தரமுகமென்றும் இருவகையாகப்பிரிந்து, அவைகளில் உத்தரமுகம் இந்தியாவென்ற ஆரியா வர்த்தத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதினுடைய முறைகள் வைதிகமாகவும் அதின் யோகவழிகள் பிராசீனக்கோட்பாடுகளைத்தழுவியுமிற்கின்றன. அதை அப்பியஸிப்போர் அவர்களது ஆயுள்முழுவதும் அப்பியஸித்தல் வேண்டும். அவர்கள் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றார்கள். கீழ்வகுப்பிலுள்ளவர்கள் 'தாஸர்'களென்றும், அதற்கு அடுத்த மேல் வகுப்பினோர் 'தீர்த்தர்'களென்றும், அதற்கு மேலாயினோர் 'பிரஹ்மம்'என்றும், நாலாவது வகுப்பினோர் 'ஆனந்தர்'கள் என்றும் கூறப்படுகிறார்கள். ஏற்றுக் கொள்ளப்படும் சீஷன் ஒவ்வொரு வகுப்பிலும் 24 வருஷம் தங்கி அப்பியஸிக்க வேண்டும். அவ்விருபத்திநான்கு வருஷங்கள் ஏழுவருஷங்களடங்கிய மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுகாலத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சீஷன் அப்பிரிவுக்குரிய முறையைத் தழுவுகிறான். கடைசி 3 வரு

ஷத்தில் முன்கற்ற பலமுறைகளையும் ஒருங்கு சேர்த்து ஒன்றாக அப்பியஸிக்கின்றான்.

***

தேகத்தை ஹிம்ஸிக்கின்ற ஹடயோகமுறைகள் இச் சங்கத்தின் பயிற்சியில் சம்பந்தப்படா. இப்பயிற்சியானது தியானமுறையைத் தழுவி, அப்பியஸிப்போர்களின் சித்த சுத்தியையும் நல்லொழுக்கத்தையும் நற்குணத்தையும் வற்புறுத்துகின்றது: 'தாஸர்'களென்ற கடை வகுப்பினர்களுடைய முதல் $3\frac{1}{2}$ வருஷம்தவிர மற்ற காலங்களில் எல்லாம் பிரஹ்மசரிய விரதம் அநுஷ்டிக்கத் தக்கது.

***

கன்னியாகுமரி தெற்கெல்லையாயும், கோகர்ணம் மேற்கிலும், வடகிழக்கில் வங்காளமும் அமைந்து இவைகளுக்கு மத்தியிலுள்ள சென்னை ராஜதானி உள்ளடங்கிய பிரதேசத்தில் ஆறு அதிகாரிகள் உளர். அவர்கள் மூலமாய் இச்சபையில் சேர விரும்புவோர்கள் தத்தம் யோக்கியதைக்கும் பூர்வஜன்ம விசேஷங்களுக்கும் தக்கவாறு அங்கீகரித்து கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட முறைகளை சிரத்தையோடு அவர்கள் அனுஷ்டித்துவரின், அவர்களோடு பயிலும் சிஷர்களையும் மேல் அதிகாரிகளையும்விட்டு அகன்று எவ்வளவு தூரத்தில் பிரிந்திருப்பினும் மநோமயமாய் ஸல்லாபம் செய்யும் சக்தியை அடைகிறார்கள்.

***

அச்சிஷர்கள் மேலதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டவுடன் அவர்களுக்கேற்ற அனுஷ்டான முறைகளைக்காட்டும் 'அநுஷ்டான சந்திரிகை' என்னும் நூல் அவர்களில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது. அம்முறைகள் ராஜயோகத்தைத் தழுவி நிற்கின்றன. அவர்களால் சில

அநுஷ்டானங்கள் வைசாகபௌர்ணமி முதலிய சில காலங்களில் அக்னிமுகமாகவும், உதக பூர்வகமாகவும் நடத்தப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 'அநுஷ்டான சந்திரிகையில்' அடியில்கண்ட சுலோகம் காணப்படுகிறது.

***

"விசாலே பதரீகண்டே மஹாத்மனோ ஹிதைஷிண: வைசாக பூர்ணிமாயாம்து குர்வந்தே ஜகன்மங்கலம்" ஆகையால், ராஜயோகிகளால் பல குப்தமான காரணங்களின் பொருட்டு கொண்டாடப்படுகிற வைகாசிமாதம் பௌர்ணமிதினம் இச்சபையோர்க்கும் விசேஷமென்று தோன்றுகிறது.

***

அச்சபையைச் சேர விரும்புவோர்களிடத்தில் ஜாதி, வர்ணம், மதம், தேசம், ஆண்பால், பெண்பால் முதலிய வித்தியாஸங்கள் அச்சபையின் அதிகாரிகளால் இடையூறுகளாகப் பாவிக்கப்பட மாட்டாவென்று சொல்லப்படுகிறது இன்னும் சுமார் 2 வருஷங்களுக்குப் பிறகு வரும் நளவருஷத்தின் முடிவில் ஒருசிறிய உபகல்பம் முடிவுபெற்று அதற்குப் பின் 24 வருஷகாலம் வரை தொடர்ந்துநிற்கும்புதிய உபகல்ப ஆரம்பத்தில்ஞானமுறையைத்தழுவவிரும்பும்மனிதர்கள் அதிகரிக்கத்தக்கதால் இக் குப்தமான சங்கமானது விளம்பரப்படுத்தப் படுகிறதென்று ஐயரவர்கள் சொல்லுகின்றனர். ஆனால் பிராசீன பாஹ்ய ஆசாரங்கள் எல்லாவற்றிலும் முழுப்பற்று வைத்து நடக்கிறவர்களின் நோக்கங்கள் இச்சபையை நோக்கிச் செல்ல மாட்டாவெனத் தோன்றுகின்றது.

***

'அனுஷ்டான சந்திரிகை' என்னும் நூலானது 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதல்பாகம் பொது விஷயங்களைப் பற்றியும் 'தாஸர்'களுக்கு விதிக்கப்பட்ட முறைகளைப் பற்றியும் கூறுகின்றன. இரண்டாவது பாகம் 'தீர்த்தர்'களின் அநுஷ்டானங்களை விவரிக்கின்றன. இந்த இரண்டு பாகங்கள் மட்டும் கிரந்தரூபமாக இருக்கின்றன. 'பிரஹ்மம்', 'ஆனந்தர்' இவர்களைச் சார்ந்தவிதிகள் வாய்மொழியாய்ச் சொல்லத்தக்கவை. 'தாஸர்'கள் சம்பந்தமான முதல்பாகத்தில் நான்கு அத்தியாயங்கள் உள. இமயமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த பதரிகாவனத்தில் கலியுக ஆரம்பத்தில் கூடின ரிஷிகளது சபையின் வர்த்தமானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அந்த ரிஷிகளில் நாராயணர், நரர், யோகதேவி என்று மூவர் பிரதானமாய்த் தோன்றுகிறார்கள். அக்கூட்டத்தின் பயனாக இந்தக் கலியுகத்தில் வர்ணாசிரம, ஸ்திரீ புருஷர் முதலிய பேதங்களைக் கொள்ளாமல் தகுதியானோர் யோகபிரஹ்ம வித்தையை அப்பியஸிக்கலாமென்று 'சுத்ததர்மம் மண்டலம்' என்ற யோகிகளும் ரிஷிகளும்கூடியஸபையொன்றுஸ்தாபிக்கப்பட்டது.

***

அச்சபையைப் பற்றிய சில வரலாறுகள் கூறப்படுகின்றன. அச்சபையின் அதிஷ்டாதா பகவான் நாராயணர், அதின் காரியதரிசி நரர். இவ்விருவர்களோடு அச்சபைக்கு ஏழு அதிகாரி புருஷர்கள் உளர். அவர்கள்:— யோகபிரஹ்மவித்தையை உபதேசிக்கும் ஞானசாரியராய் ஸத்யலோக பிரதிநிதியான நாரதர், யோகபிரஹ்ம வித்தையை கீழுலகங்களில் பரவச்செய்யும் ரிஷிகளுக்கு உபதேசத்தைக் கொடுப்பவரும் தபோலோக பிரதிநிதியாயுள்ளவருமாகிய வாமதேவர். காசிபர், ஜனலோகப் பிரதிநிதியாயிருந்துகொண்டு யோகப்பிரஹ்ம வித்தையைப் பரவச்செய்வோர்களின் அபிவிர்த்தியைக் கவனித்துக் கொண்டிருக்

கின்றனர். மகர்லோகத்தில் சந்தபாநு என்போர் நின்று கொண்டு யோகபிரஹ்ம வித்தையின் முறை ஒழுங்கு தவருமல் அநுஷ்டிக்கப் படுவதை மேல்பார்த்து வருகினறனர். காலதேவர் ஸ்வர்க்கத்தின் பிரதிநிதியாக இருந்துகொண்டு யோக பிரஹ்மவித்தை அப்பியாஸிகளின் இடையூறுகளை நிவர்த்திக்கின்றனர்; புவர்லோகத்திலிருக்கும் சுப்பிரமணியர் மூலமாய் யோக பிரஹ்மவித்தையை உபதேசிக்கிறவர்களும் அதை அப்பியஸிக்கிறவர்களும் அவர்களுடைய மனோமய கோசங்களை சுத்தமானவைகளாகச் செய்கிருர்கள். கடைசியாக தேவாபியானவர் பூலோகத்தில்பகவான் நாராயணருடைய பிரதிநிதியாக நின்றுகொண்டு யோகப் பிரஹ்ம வித்தையின் அப்பியாஸிகளைக் காக்கிருர்.

***

தவிரவும் மேற்சொல்லிய ஏழு அதிபர்களில் ஒவ்வொருவருக்கும் கீழாக பதினெண்மர்கள் இருக்கிருர்களென்றும், அவ்வாறு 126 பேர்களின் நாமங்கள் கூறப்படுகின்றன. அவர்களில் தேவாபி என்றவரின் கீழுள்ளவர்களில் மைத்திரேயர் ஒருவரென்று சொல்லப்படுகிறது. இவர்களோடு பகவான் நாராயணரையடுத்து 32 சித்தர்கள் இருக்கின்றனர் என்றும் அவர்கள் உலகத்தில் பல விடங்களில் ஞான மார்க்கத்தைத் தழுவுகின்ற மனிதர்களின் க்ஷேமத்தைக் கருதுகிருர்களென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருஷம் வைசாக பௌர்ணமிதினத்தில் பதரீவனத்தில் இந்த சுத்ததர்ம மண்டலத்தில் அங்கத்தினர்கள் கூடி அடுத்த வைசாக பௌர்ணமிவரையில் அவர்களால் நடத்தப்படவேண்டிய காரியாதிகளைப்பற்றி ஏற்பாடு செய்கிருர்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

***

ஒருவன் இம்மண்டலத்தைச் சேர்ந்த சீஷனுக அங்கீகரிக்கப் படுமுன் ஒன்பதுவிதிகளை அநுஸரிப்பதாக உறுதிமொழி கூறவேண்டும், அவையாவன:—

(1) உலகத்திலுள்ளோருடைய சுகதுக்கங்களை தனதாக பாவித்து உலகத்தின் க்ஷேமத்தையே கருதி எந்த ஜீவராசிகளுக்கும் ஹிம்ஸையைச் செய்யாதிருத்தல்.

(2) நிச்சய புத்தியில்லாதவர்களுக்கும் துஷ்கிருதர்களுக்கும் அனதிகாரிகளுக்கும் யோக பிரஹ்மவித்தையை போதிக்காமலிருத்தல்.

(3) பிறருடைய அர்த்தத்தை அபகரியாதிருத்தல் பிறர்களையும், யோக பிரஹ்ம வித்தையையும் அதின் ஆசாரியர்களையும் தூஷிக்காமலிருத்தல்.

(4) சுத்த தர்ம மண்டல ஆசார்யர்களின் முறைகளுக்கு விருத்தமான வர்ணாசிரம தர்மங்களை ஒழித்தல்.

(5) உலக க்ஷேமார்த்தமாக சாந்தமான மனோ நிலைமையுடன் காலதேச நிலைமைக்குத் தக்கவாறு தர்மத்தை அபிவிருத்தி செய்து தனக்கும் பிறருக்கும் வித்தியாசம் பாராட்டாமல் சுத்த தர்ம மண்டல முறைகளை அனுஸரித்தல்.

(6) சுத்தமான மனதுடன் துர்ச்சகவாஸத்தை ஒழித்து துன்மார்க்கத்தினின்று விலகி அசுசியான ஆகாரங்களை உட்கொள்ளாதிருத்தல்.

(7) இஜ்ஜன்மத்தில் எச்சுகதுக்கங்கள் நேரிடினும் அம்மண்டலத்தின் முறைகளினின்றும் வழுவாது உறுதியாய் நிற்றல்.

(8) பரப்பிரஹ்மத்தின் அடையாளமாகிய பரமுத்திரையை சிஷன் தன்தலையின் பேரில் வைத்துக்கொண்டு அதின் மூலமாய் யோக சக்தி பிரஹ்மரந்திரம் வழியாய் பிரவேசிக்கும்படி செய்தல்.

(9) ஆசாரியனின் ஆக்ஞையினின்றும் விலகாமல் அம்மண்டலத்திற்கும் சிஷனுக்கும் ஏற்பட்ட சம்பந்தம் சாசுவதமாயிருக்கும்படி செய்தல்.

மேற்சொல்லிய நிபந்தனைகளைத் தவிர சிஷன் இன்னும் சிலமுறைகளைக் கைக்கொள்ளல் வேண்டும். அவன் மண்டலத்தைச் சேர்ந்த காலமுதல் மூன்றரை வருஷங்களுக்குப்பிறகு பிரஹ்மசரிய விதியைக் கைப்பற்றவேண்டும் அந்த மூன்றரை வருஷக்காலத்திலும் அவனது ஆசாரியனால் ஏற்படுத்தப்படும் விதிகளின் பிரகாரம் அக்கிருஹஸ்தாசிரம வழியில் நிற்கவேண்டும், சிஷனானவன் அவனது மதாசாரப் பிரகாரம் காமிய கருமங்கள் செய்ய விரும்புவானாகில் சுத்த தர்ம மண்டல ஆசாரியர்களால் விதிக்கப்படும் முறைகளைத் தழுவி செய்யவேண்டும். யோக பிரஹ்ம வித்தையின் முறைகளைத் தழுவுவதினால் கிருஹஸ்தாசிர தர்மங்களை கைவிடக்கூடாது. சம்சாரம், பெற்றோர், சுற்றத்தார், குழந்தைகள், அரசன் இவர்களுக்குரியகடமைகளைச்செய்யவேண்டும். யோக பிரஹ்மவித்தைக்காக சிஷனால் ஆர்ஜிக்கப்படும் பொருளில் அரைக்கால்பாகம் தவிர மற்றதைக் கைக்கொள்ளக்கூடாது. ஸ்தானம் காலம் இவைகளுக்குரியதாய் ஆசாரியனால் அப்போதைக்கப்போது விதிக்கப்படும் விதிகளின் பிரகாரம் நடக்கவேண்டும். சுத்த தர்ம மண்டலத்தின் அபிவிருத்தியை நாடவேண்டும். இவ்விதமாக சுத்ததர்ம மண்டலம் என்ற சபை ஒன்று உளதென்றும் அதின் கொள்கைகளும் முறைகளும் மேற்கூறிய வாறு இருக்கின்றனவென்றும் ஐயரவர்கள் எழுதியிருக்கின்றனர். பிராசீன ஞானயோக முறைகளில் பற்றுள்ளவர்களால் மேற்சொல்லிய பிரகாரம் வெளியிடப்பட்ட விஷயங்கள் விசேஷமானவைகளெனக் கவனிக்கப்படுமென்பதில் ஐயமில்லை. எவர் அந்த மண்டலத்தைச் சேர விரும்புகிறார்களோ அவர்களது பேரை அம்மண்டலத்தின் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க ஐயரவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் எழுதியிருக்கின்றனர்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

# மீராபாய்.

## நாடக பாத்திரர்கள்.

அக்பர்—டில்லி சக்ரவர்த்தி.

கும்பாஜி—மீவார்தேசத்து ராஜா.

அபுல்பாஸல், அபுல்பாஸை—அக்பருடைய மந்திரிகள்

குணசீலர்—கும்பாஜியின் மந்திரி

ஆனந்தசாஸ்திரி—ஒரு வைதிகர்.

குமாரசிங்க், ஜயசிங்க்—மீவாரிலுள்ள கனவான்கள்.

ஏகநேத்திரன், அதிமூடன்—கொலையாளிகள்.

மீராபாய்—கும்பாஜியின் பட்டமஹிஷி.

சுந்தரீபாய்—மீராபாயின் ஸபத்நீ.

நீலா—ஒரு சேடி.

சேவகர்கள், கடைச்சாமான் வாங்குவோர்கள் முதலியவர்கள்.

### காட்சி.

கும்பாஜியின் அரண்மனையிலும், அதனருகேயுள்ள கிருஷ்ணாலயத்திலும் வனத்திலும், பிருந்தாவன க்ஷேத்திரத்திலும், அக்பருடைய அரண்மனையிலுமாம்.

### அங்கம் 1. களம் 1.

காலம்—காலை.

இடம்—அக்பருடைய அரண்மனையில் ஓரறை.

நாடக பாத்திரர்கள்:—அக்பர், அபுல்பாஸல், அபுல்பாஸை.

அக்பர்:— (மற்றிருவர்களையும் நோக்கி) நேயர்காள், சகல ஜனங்களுடைய ஹிதத்தை முன்னிட்டு நாமேற்படுத்தியுள்ள டினில்லாஹி நாளுக்குநாள் விருத்தியடைய

வேண்டியிருக்க, அது வரவர க்ஷீணிக்கிறதாகவல்லவோ தோன்றுகின்றது? அதற்குக் காரணமென்னவிருக்கக் கூடும்? நாம் ஒருங்குசேர்ந்து வெகுகாலமாய் யோசித்துக் கடைசியில் ஏற்படுத்தினதல்லவா அது? ஜனங்களெல்லோரும் அக்கொள்கையை மேற்கொள்வதில் ஆனந்திக்கவேண்டியிருக்க, அவர்களதை நிந்திக்கிறதாகவல்லவோ தெரியவருகிறது! ஜனங்களுக்கதனிடத்தில் அப்ரியமுண்டாகும்படிக்கென்ன கெடுதல்களதிலிருக்கக்கூடும்? அல்லது ஜனங்களுக்கு வாஸ்தவத்தில் நன்மையைக் கொடுக்கும்படியான குணங்களதிலொன்றுமில்லையோ?

அபுல்பாஸை:-மஹாராஜ், டினில்லாஹியில் நற்குணங்களில்லையென்று எப்படிச்சொல்லக்கூடும்? இப்போது அஞ்ஞான சாகரத்தில் மூழ்கி அதைத் தாண்ட வழிதெரியாமல் தபித்துக்கொண்டிருக்கும் பேதைகளுக்கொருதோணிபோலுள்ளதல்லவா அக்கொள்கை? நாமெங்கு பார்த்தாலும் ஒவ்வொரு மதத்தினரும தங்கள் தங்கள் மதத்தைத்தவிர வேறுள்ள மதங்களனைத்தையும் நிந்தித்தும், எல்லாமதங்களிலேயும் குணங்களிருக்கின்றன என்பதைக் கவனியாமலும், பற்பல மதங்கள் பகவானையடைய பற்பலமார்க்கங்களென்பதைமறந்தும் நிற்கிறார்கள். அப்படியிருப்பது அவர்கட்கே கெடுதலை விளைவிக்குமென்பதை யவர்களறியவில்லை. கருணாநிதியான பகவான் சகல பூதங்களையும் தன்னுடைய குழந்தைகள் போல் பாவித்து நியாயத்தைச் சரிவர நடத்துவது உண்மையாயின் அவரை யடையும்படியான யோக்கியதை ஒரு மதத்திலிருக்கிறவர்களுக்கு மட்டு மேற்பட்டிருக்குமா? இந்த உண்மையையறியாமல் ஜனங்கள் கெட்டுப்போகிறார்களென்பதை நன்றாயுணர்ந்து, அவர்களுடைய அஞ்ஞானத்தை நீக்க மனங்கொண்ட தேவரீர் சகல மதங்களிலிருக்கும் குணங்களையெல்லா மொன்றுசேர்த்து எல்லாரு மங்கீகாரம் பண்ணிக் கொள்ளும்படி இந்த டினில்லாஹியை

ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அதில்தோஷமென்பதுஎள்ளளவு கூட இருக்க விடமில்லையே. மேலும் யாருக்காவது கெடுதலை விளைவிக்கக் கூடியதா? இவ்விராஜ்யத்திலுள்ள எல்லா மதஸ்தர்களும் தங்களுக்குள் மதபேதத்தினு லிருந்துகொண்டிருக்கும் வைரத்தைவிட்டு சகோதரர்கள் போலொருவரையொருவர் நேசிக்க வழியைக் காட்டுகிறது. அப்படியிருக்க ஜனங்க ளதைக்குறித்து சந்தோஷப்படாமலதை வெறுப்பது ஆச்சரியப் படத்தக்கதாகவே யிருக்கிறது.

அக்பர்:—இஃதிப்படி நிற்க, நேற்று ராத்திரி நான் கண்டகனவைக் குறித்து யோசிக்குமிடத்து என் மனதுக்கொருவிதமான சாஞ்சல்ய முண்டாகிறது.

அபுல்பாஸல்:—அஃதென்ன கனவு, மஹாராஜ்?

அக்பர்:—சகே,நான் கண்டது கனவாயிருந்தபோதிலுமதைப்பற்றி நான் நினைக்கும்போது என்மனம் பதைக்கிறது. அதை யுரைக்கவுமென் நாவஞ்சுகிறது. பாசல்! வழக்கப்படி நேற்றிரவு இபாதத்கானுவிலிருந்து மததத்வ வாதங்களை நடத்திவிட்டு நானுங்களிருவருக்கும் விடையளித்து சயனக் கிருஹத்துக்குச்சென்று நித்திரைசெய்ய ஆரம்பித்தேன். சீக்கிரததில் நித்திரையும் வந்தது. கனவில் ஐந்து மூலைகளோடுகூடின ஒரு கட்டிடத்தைக் கண்டேன். அதிலொருமூலையில் கிருஸ்தவர்கள் தங்களியேசுவைக் குறித்தும், வேறொருமூலையில் பௌத்தர்கள் தங்கள் புத்தரைக்குறித்தும், மற்றொருமூலையில் ஜோராஸ்த்திரியர்களக்னி பகவானைக் குறித்தும், வேறொருமூலையில் ஹிந்துக்கள் தங்களீச்வரனைக் குறித்தும், மீதியுள்ள மூலையில் மகம்மதியர்கள் தங்கள் மகம்மதுவைக் குறித்தும் துதிக்க அக்கட்டிடத்தின் நடுவில் நானுங்களிருவருடனே யிருந்து அந்த ஸ்தோத்திரங்களையெல்லாம் கேட்டு அளவிலா வானந்தத்தை யநுபவித்துக் கொண்டிருந்தேன்; அச்சமயத்தி

லெனது முதற்குமாரனான சலீம் அங்குவந்து உன்னைக் கீழேதள்ளி உன்னுயிரை மாய்க்கவும் கண்டேன். அதைக் கண்டு என்மனம் பட்டபாட்டுக் களவே கிடையாது. உன்னைப் பிரிந்ததுக்கம் பொறுக்கமாட்டாமல் நானும் சீக்கிரத்திலென் பிராணனை விடுத்தேன். ஆனாலாச்சரியத்தைக் கேள்! நானிறந்தபோதிலு மெனதுகண்கள் பார்த்தன, காதுகள் கேட்டன. நானிறந்தபிறகு சலீம் அக்கட்டிடத்தை யிடித்துக் கீழேதள்ளி அது இருந்த இடத்தைப் பாழாக்கினான். அதைப்பார்க்கவென் மனமெப்படித் துடித்தது! அப்புறம் கொஞ்சகாலம் சென்றபின் நேற்று நமது சபைக்கு வந்திருந்த பாதிரிகளைப்போன்ற சில வெள்ளைக்காரர்கள் திரும்பவு மப்பாழைச் சீர்திருத்தி அக்கட்டிடத்தையும் புதிதாய்க் கட்டக்கண்டேன். நான் கட்டின கட்டிடமழிந்து போனபோதிலும் அதைத் திரும்பவும் கட்டக் கண்டவுடனே என்மனதிக்குக் கொஞ்சம் சமாதானமுண்டாயிற்று.

அபுல்பாஸல்:—(யோசித்து) மஹாராஜ், இந்தக் கனவைக் குறித்து யோசித்துப் பார்த்தாலது சாதாரணமான கனவென்றெனக்குத் தோன்றவில்லை. கனவிலு மிரண்டு விதமான கனவுகளுண்டு. பகலில் பற்பல யோசனைகள் செய்து, அதற்குத் தக்கபடி நமதுமூளையை நாம் உபயோகப்படுத்த, இரவில் நாமுறங்கும்போது தனக்குத்தானே விடப்பட்ட அம்மூளையானது தன்னை யடக்கியாளுகிற அரசனில்லாததால் தனக்கு பழக்கப்பட்டிருக்கிற வழிகளில் தானே அலையத்தொடங்கும். இப்படி யுண்டாகிற கனவுகள் கோர்வையாகவும் விசேஷ தாத்பர்ய முள்ளதாகவுமிரா. சில சமயங்களில் நாம்தூங்கும்போது நம்முடைய சூக்ஷ்மசரீரம் இந்த ஸ்தூல சரீரத்தைவிட்டு வெளிப் புறப்பட்டு சூக்ஷ்ம லோகங்களில் சஞ்சரித்து அங்கிருந்து அநேக அநுபவங்களைக் கிரஹிப்பதுண்டு. இவ்விதம் சஞ்

சரிக்கும்போது, இனி நடக்கப்போகிற விஷயங்கள்கூட சில சமயங்களிலதற்கு (ஆகாயத்திநின்றும் பிரதிபிம்பிக் கப் பட்டுள்ளவைகளாய்)த் தெரியவரும். தங்களுடைய கனவு இவ்விதக் கனவென்றேயெனக்குத் தோன்றுகிறது. நீங்கள் கண்ட கனவும் நடக்கக்கூடிய விஷயங்களைப்பற்றியுள்ளதுதானே. தங்களுடைய குமாரன் சலீமுக்கு என்னிடத்திலுள்ளவிரோதமும் டினில்லாஹி விஷயத்திலுள்ள வெறுப்பும் தங்களுக்கு நன்ருய்த்தெரியும். கனவில்கண்ட ஐந்துமூலைக் கட்டிடமிந்த டினில்லாஹிதான். தங்களுக்குப் பிற்காலம் சலீமதைச் சின்ன பின்னப்படுத்தப் போகிருனென்பதிற் சந்தேகமில்லை

அக்பர்:—இக்கொள்கையை நானேற்படுத்தினேனென்கிற பெருமை யெனக்கு வேண்டாம். எப்படியாவது ஜனங்களுக்கு க்ஷேமமுண்டானல்,போதும். ஒரு வேளை எனக்கெங்கே இதனல் அகம்பாவம் வந்துவிடப் போகிறதோ வென்று பகவானிப்படித் தீர்மானித்திருக்கிருர் போலும்.

அபுல்பாஸை.—அப்படி யிருக்கக்கூடும். இக்கொள்கை ஜனங்களுக்கு நன்மையை விளைவிக்கக் கூடியதுதானென்பதற்குச் சாக்ஷி என்னவென்ருல், சலீம் அதை நாசப்படுத்தினுலும் அதைத் திரும்பவும் கட்ட, கொஞ்சகாலத்துக்குப்பிற்கு வெள்ளைக்காரர்கள் வரப்போகிருர்களென்பதே. ஆனுலெல்லோருக்கும் நன்மையை விளைவிக்கக் கூடியதான இது இப்போதழிந்து போவானேனென்ருலோ, அதற்குத் தருந்தகாலம் வரவில்லைபோல் தோன்றுகிறது. தேவரீர் அதிபுத்திமானுனதால் இருநூற்றைம்பது அல்லது முன்னூறு வருஷங்களுக்குப் பின் ஜனங்களறியப் போகிறதை இப்போதே அறிந்துணர்ந்து விட்டீர்கள். சகல மதங்களிலுள்ள சாரத்தை நீங்களறிந்தீர்கள். எல்லா ஜனங்

களுக்குமது விளங்கவேண்டாமா? விளங்காததால் தானவர்களிப்போது டினில்லாஹியை யநுபவிக்க முடியவில்லை. ஆனு லிந்தவேற்பாடுசெய்தது வீணுய்ப்போகாது. இப்போதிப்புவியி லுண்டாக்கப்பட்டிருக்கிற சக்தி வீண்போகாது தகுந்தகாலம் வரும்போது தன் பலனைக் கொடுக்கும்.

அக்பர்:—ஆம். அது வாஸ்தவந்தான். அதைத்தான் நான் கோருகிறேன்.

அபுல்பாசல்:—பகவான் ஜனங்களுடைய நன்மையையுத்தேசித்தே நம்மை யிந்தமாதிரியான புது ஏற்பாட்டொன்றை ஏற்படுத்தத் தூண்டியிருக்கிறு ரென்பதற் கடையாளங்களனேக மிருக்கின்றன. ஈசனெருசமயம் ஜகதுத்தாரணம் செய்ய வேண்டுமென்று உத்தேசிக்கும் பக்ஷத்தில் அதைசாதிக்க பற்பல விடங்களில் அவ்வவ்விடங்களுக்குத் தக்கபடி சாதனங்களை ஏற்படுத்திக்கொள்வார். நாமிப்போதெல்லாப் பிரஜைகளுடைய ஹிதத்தை உத்தேசித்தும், அவர்களுக்குள்ளிருக்கும் வைரத்தைக் குலைக்க விரும்பியும் பிரயத்தனப்படுவதுபோலவே மீராபாயென்கிற பக்தை மீவார் தேசத்தில் ஜகன்மாதாபோல் நின்று ஜனங்களுக்கு பக்தியைப் புகட்டியவர்களுக்கு ஹிதத்தைச் செய்து வருகிறுள். இதேமாதிரி அந்தந்த விடங்களுக்குத் தக்கபடி ஏற்பாடுகள் பகவதிச்சையால் செய்யப்பட்டு வருகின்றன.

அக்பர்:—மீவார் தேசத்திலா?

அபுல்பாசல்:—ஆம். மஹாராஜ்.

அக்பர்:—அவள் பெயரென்னவென்று சொன்னுய்?

அபுல்பாசல்:—மீராபாய்.

அக்பர்:—ஓஹோ, கும்பாஜிராணுவின் பத்தினியோ?

அபுல்பாசல்:—ஆம். மஹாராஜ்.

அக்பர்:— அவள் நீ கூட புகழும்படியான அவ்வளவு பெரிய பக்தையா?

அபுல்பாசல்:—மஹாராஜ்! அவளுடைய பக்திக்குச் சமானமான பக்தியிருப்பதரிது. பகவானைக்குறித்து பக்தி செய்வதில் அவளுக் கீடானவர்களைக் காண்பது வெகு அரிது. மேலும் அவள் பக்திபோடுகூட சங்கீதத்தைக் கலந்து பகவானை ஆராதிக்கிறுளாம். மார்வார் தேசத்து ராஜவம்சத்தைச் சேர்ந்த தங்கள் மித்திரனுன ரத்ன சிங்கினுடைய புத்திரியாய்ப் பிறந்து குழந்தைப் பருவமுதல் கிருஷ்ண பகவானிடத்தில பக்தியைச் செலுத்தினவளாம். விவாககாலத்தில் தனக்கு விவாகம் செய்துகொள்ளாமல் ஆயுள்முழுவதையு மீச்வரனுக்கே யர்ப்பணம் செய்துவிட வேண்டுமென்கிற அபிப்பிராய மிருந்தபோதிலும் தனது தாய் தந்தையர்களுடைய வார்த்தைக் கிணங்கி கும்பாஜி ராணுவை விவாகம் செய்துகொண்டாள். அவருடைய வந்தப்புரத்திலொரு திலகம்போல் விளங்கிக் கொண்டிருக்கிறுள். தினந்தோறும் காலையில் அந்நகரத்துக்கு வெளிப்புறத்தில் சகல மதஸ்தர்களும் வந்தாராதிக்கும்படியாக தானே நிர்மித்துள்ள ஓர் கிருஷ்ணுலயத்துக்குச்சென்று கானபூர்வமாய் பகவானைக்குறித்து பஜனைசெய்து, அதைப் பார்க்கவரும் ஜனங்களின் மனதை ஈசனுக்கு வசப்படுத்துகிறுளாம். அவளபபடி பக்தி செய்வதைப் பார்த்துருகாதவர்கள் கிடையாது. அந்நகரத்திலுள்ளவர்க ளொவ்வொரும் தினமெதுசெய்ய மறந்தாலும் கிருஷ்ணுலயத்தில் மீராபாய் பஜனை செய்யும்போது அங்குவந்து அதை யநுபவிப்பதை யொருபொழுதும் மறப்பதில்லையாம்.

அக்பர்:-ஆ! இத்தகைய மாதுசிரோமணியைத் தன் மனைவியாகவுடைய கும்பாஜிராணு என்னபாக்கியம் செய்திருக்க வேண்டும்? இதைக் கேட்கும்போதே எனக்கவ்வாலயத்துக்

குச் சென்று அந்த மாதுசிரோமணியின் பக்தியைப் பார்க்க வேண்டுமென்ற அவாவுண்டாகிறதே. இப்படிப்பட்ட பக்தை யிக்காலத்தி லிருப்பதரிதல்லவோ? ஆச்சரியமாயிருக்கிறது. (யோசித்து) அஃதெல்லாமிருக்கட்டும். நான் மீவாருக்குச்சென்று கட்டாயமந்த பக்தாசேகரியைக் காணவேண்டும், அவளுடைய பஜனையையும் பார்த்துக் களிக்கவேண்டும். பாகவத தர்சனம் பாபவிமோசனம்.

அபுல்பாசை:—தங்களைப்போலொத்த பக்தர்களுக்கு பக்தர்களைக் காண்பதிலோரானந்தம். அவளுடைய பக்தியைப்பற்றி வியந்து பேசாதவர்கள் கிடையாது. தங்களுக்கு மீவாருக்குச் செல்ல விருப்பமிருந்தால் போய் வாருங்கள்.

அபுல்பாசல்:—ராஜ்யபாரத்தைக் குறித்து விசாரப்படவேண்டாம், மஹாராஜ்!

அக்பர்:—நீயு மபுல்பாசையு மிருக்கும்போது அதைப்பற்றினகவலை யெனக்கொருபொழுதும் கிடையாதே. நான் மாறுவேடம்பூண்டு மீவாருக்குச்சென்றுவருகிறேன். இந்த சமாசார மொருவருக்கும் தெரியவேண்டாம்.

(உள்ளே சங்கத்வான முழக்கம்.)

இதோ சங்கத்வானம் முழங்குகின்றது. சபைக்கேகலாம், வாருங்கள்.

(எல்லோரும் போகிறார்கள்.)

(காட்சிமுடிந்தது.)

R. ஸ்ரீநிவாஸையர். M. A.

117

௨

சற்குருப்பிரயோகம்:-

# ஸ்ரீதேவாபி, மருகுருநாத ரிரட்டை மணிமாலை.

---

வெண்பா

திருவார் பரமகுரு தேவாபி தேவப்
பெருமான் திருவடியைப் பேணிக்—குருவாகக்
கொண்டால ருந்துயர்போம், கூறரிய முத்திநெறி
கண்டுகொள்ளலாமனமே காண்.

கட்டளைக் கலித்துறை

கண்டார் வியக்கு மருகுருநாதன் கருணை பெற்றுக்
கொண்டாற் குறையில்லை நெஞ்சே நின்மூடக் குணங்களற்று
வண்டார் மலர்ப்பதங்கண்டாரைக்கண்டு வணங்கி நிற்கப்
பண்டார் பவமற்றிருமாக்கு ஞானம் பலித்திடுமே

வெண்பா

பாலித்தனின் கடனும் பக்தி செய லென்கடனு
மாலிக்குந்தேவாபி யாண்டவனே—கூலிக்கு
வந்தவனென் றுன்னுய் மகவெனுமோர் சம்பந்தஞ்
சிந்தையு வந்தன்புநிலை சேர்

கட்டளைக் கலித்துறை

சேர்க்குந்தரமில்லை யென்றுரைத்தா லென்னசெய்குவனிப்
பார்க்குள்ளேனைப்புரப்பாரில்லை யொன்றுசெய் பக்தி மிகுந்
தார்க்கு நின்றொண்டர் வழித்தாகவா வதருள்புரிந்தே
யீர்க்கும் படிக்கருள் செய்வாய் மருகுருவென்னையனே.

வெண்பா.

அப்பனெனுந் தேவாபியாண்டவா நீ குருவை
யெப்படியுற்றின்பமெலா மெய்தினை—யிப்படியென்
றெற்கருளினலடியே னேத்திப்பலகாலுஞ்
சற்குரு வென் றுன்னத்தகும்.

கட்டளைக்கலித்துறை.

தக்கநற் சாந்தந்தயை பொறை சத்தியஞ்சாருமன்ப
ரெக்குலமாயினு மன்னோரிழிவு மிறவினிய
பக்குவமாக்கும் பரம மருகுரு பாவகவென்
துக்கமகற்றல் பளுவோ சொலீச துரந்தரனே

வெண்பா.

துரந்தரனே தேவாபி தூயநின் பொற்பை
நிரந்தரமாயுன்னுகின்ற நெஞ்சம்—பரந்தமன
முன்னிற் கரைந்தொடுங்கியுய்யவுமே யிப்பிறப்புத்
தன்னிற் பலிக்கவருள் தா

கட்டளைக்கலித்துறை.

தாதா மருகுருநாதா விதூரகித சாதனங்க
ளேதாவறுந் துணிவில்லாவறி விலியின்புறவுன்
பாதாம் புபத்தைப் புகழ்ந்தோது பாவையும் பக்தியுடன்
ஓதாது ஞற்றுந்தியானமு மேற்றருளூட்டுவையே

வெண்பா.

ஊட்டுமே ஞானப்பா லோதரிய முத்திநெறி
காட்டுமே மாதரது காதனேய்—ஓட்டுமே
தேவாபி ஞானகுரு சிட்டரடிக்கன்பியற்றி
நாவால் வழுத்துவதினல்.

கட்டளைக்கலித்துறை.

வழுத்து மகத்துக்க ணின்புறநாடி வருந்தியன்பு
பழுத்து வந்தாநந்தம் பெற்றனர் யான்மிகு பாவிகள்போற்
கொழுத்துப் புசித்துக் குடித்த மனங்குராங் கொத்தவெனை
யிழுததுப் புரக்கவல்லா யோமருகுருவீசரனே.

வெண்பா.

ஈசுரனே தேவாபி யேழையேற்கிப் பிறப்பிற்
பாசபந்த சஞ்சிதத்தைப் பாழாக்கு—நேச
நிருவிகற்ப நிட்டை நிலைக்குமோவன்றி
குருபணியிற் கூட்டுவையோ கூறு.

கட்டளைக்கலிததுறை.

கூற்றுவன் வந்தபின் கூற்றையுதைக்குங் குருபரனை
யேற்றுவ மென்றெண வுண்டோ விடானவ னெம்மனனே
சோற்றுத் துருத்திக் கண்காற்றுள நாளிற்றுரியநிலை
சாற்று மருகுருநாதனைப் போற்றவுந் தாழ்விலையே.

வெண்பா.

தாழாது ஏற்றுந் தவத்தோர்பாற் சென்றிருளைப்
பாழாக்குந் தேவாபி பாதமலர்—தாழாது
ஈடனையிற் சிக்கியிழிமனமே நீதவறிற்
கூட வரத் தக்கனவோ கூறு.

கட்டளைக்கலித்துறை.

தக்கநற் சாதுக்க ளேற்றுந் தயாநிதி சாந்தமரு
ளொக்கத் திரண்டுருக்கொண்ட மருகுரு வுத்தமநின்
பக்கல் வந்தேற்றிப் பணிபுரிந்தார்க்கருள் பாக்கியமெற்
கிக்கண நல்கிக் கரையேற்றுவாய் மிகவின்புறவே.

வெண்பா.

இன்பமிகுந்தேவாபி யென்னரசே கேண்மோநின்
அன்பரடிக் கன்புளவென்னுர்வத்தை—யன்பில்லா
வல்லவித்தை யென்னுளத்து வந்தெதிர்க்க நின்பேரைச்
சொல்லவுமாயந் தோடியதென்சொல்

கட்டளைக்கலித்துறை.

சொல்லவுங்கேட்கவு மென்போலிழிந்தவர் தொல்லுலகி
லில்லவுமில்லையினிப் பிறப்பாருமி லென்புகல்வேன்
வல்லவருட் கிருபாநிதி யெனறுனை வந்தடைந்தேன்
நல்லவனுக்கத் தகுமே மருகுரு நாயகனே.

வெண்பா.

நாயகனே தேவாபி நாயகனே நால்வேத
நாயகனே நாயேற்கு நாயகனே—தாயகம்வே
றில்லை யெனமாயை, யேமாற்று, ளேமாறு
வெல்லை சொலிவைக்க வெண்.

கட்டளைக்கலித்துறை.

அருள்சேர் திருமுகமாநந்த நோக்கு மமைந்த செஞ்சொற்
பொருள் சேரமல மருகுருநாதவென் புத்தியின் கண்
மருள் சேருந்துயர் மாய்ந்து பசாந்த மனத்துறவே
தெருள் சேர்பரமுத்தி சேர்வதெக்காலஞ்சொல் தேசிகனே

வெண்பா.

தேசிகனே தேவாபி தேசிகா வுன்புகழைப்
பேசுதற்கென் வாக்கினின்று பேசிநு—யாசுகவி
வித்தகர்க்கு மெட்டாமிகப் பெரியோய் நாயேற்குச்
சித்த சுத்தி யீந்துனடிசேர்.

கட்டளைக்கலித்துறை.

சேருங்கதிக்கருள் செய்தாய் மருகுரு சித்தவினி
நேரும் பிறவிகட் கஞ்சேனி றப்பது நிச்சயமென்
றேரும் பொழுதச்ச மேலிடலாலுயர்ந் தோயடியேன்
றேருமபயந்தந்தென் சிரஞ் சூட்டுன்றிருவடியே.

ஓம் தத் ஸத்.

M. வேதநாயக ஸ்வாமிகள்.

## தியானக்கிரம விஷயம்.

—

### ஜூன் மாசம்.

(3) நீ எல்லாருக்கும் உதவிபுரியவேண்டுமானல் எல்லாரையும் பற்றி நன்றாயறிந்து கொள்ளவேண்டும்.

(4) ஒவ்வொருவனிடமும் ஒவ்வொரு வஸ்துவினிடமும் நன்மையும் இருக்கின்றது தீமையும் இருக்கின்றது.

(5) உன்சொந்தமதத்தில் உனக்கிருக்கும் அபிமானம் போல் இதர மதஸ்தர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளிலும் நீ மனப்பூர்வமான அபிமானமுள்ளவனாக இருக்கவேண்டும். உன் மதத்தைப் போலவே ஏனையமதங்களும் ஈசுவரனிடத்துச் சேர்க்கக்கூடிய பல வழிகளே.

(6) எவன் ஈசுவரன் வழியே நிற்பானே அவன் நம்மில் ஒருவனாகிறன். அவன் ஹிந்துவானாலும்சரி, பௌத்தனானாலும் சரி, கிறிஸ்தவனானாலும் சரி, மகம்மதியனானாலும் சரி, இந்தியன், இங்கிலீஷ்காரன், சீனன், ருஷியன், அல்லது வேறு யாரானாலும் சரி, சிறிதும் பாதகமில்லை.

(7) ஆடம்பரக் கிரியைகளைப் பற்றி நிற்பவர்களை நீ நிந்திக்கவேண்டாம்.

(8) தீயது எதுவானாலும் நிலையில்லாததென்பதை ஞாபகத்தில் வைத்து, எப்பொழுதும் சந்தோஷமுள்ளவனாகவும் சாந்தமுள்ளவனாகவுமிருக்கவேண்டும்.

(9) குருநாதன் அவர் சிஷ்யன் மூலமாகவே தமது சக்தியைப் பிறர்பால் செலுத்தும்படி அடிக்கடி நேரும். ஆகையால் சிஷ்யன் எக்காரணத்தாலும் மனத்தளர்ச்சிக்கு இடங்கொடுக்கலாகாது. இடங்கொடுப்பின் குருநாதன் அவ்விதம் செய்யமுடியாது. ஆகையால் சந்தோஷமுள்ளவனாக இருத்தல் வேண்டும்.

(10) மனத்தளர்ச்சி கொள்ளுதல் எப்போதும் பிசகு. ஏனெனில் அது வேறு மனிதர்களையுங் கூட துயரத்திற்குள்ளாக்கி அவர்களது வாழ்க்கையையும் துயரத்திற்குட் படுத்துகிறது.

(11) தினசரி வாழ்க்கையில் நேரிடும் சங்கடங்களை இலகுவாக்கிக் கொள்ளவேண்டும். அதாவது அவைகளைப் பற்றி விசனத்துக் கிடங்கொடாமல் இலேசாய்த்தள்ளிவிட வேண்டும்.

(12) பெரும்பான்மையோர் அற்பவிஷயங்களில் கிலேசப்பட்டு காலத்தை விருதாவாக்கிக்கொள்வதுபோல, அற்ப விஷயங்களில் நீ கிலேசத்தை அடையாமல், அதினின்று நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்.

(13) வியசனம், கஷ்டநஷ்டம், வியாதி இவைகள் போன்று வெளியினின்று நேரிடும் விஷயங்களை நீ சந்துஷ்டியுடன் பொறுத்துக் கொள்ளவேண்டும். இவைகள் பூர்வ ஜன்ம கர்மங்களின் பலன்கள். அதாவது முன் ஜன்மங்களைச் சேர்ந்த (பிராரப்த) கர்மங்களின் பலன்கள், இந்த ஜன்மத்தவைக ளல்லாததால் மாற்றமுடியாதவைகள்: ஆகையால் அவைகளைக்குறித்து நீ வருந்துவது நிஷ்பிரயோஜனமாம். இவைகளை நினையாது, இப்பொழுது நீ செய்யும் செய்கைகளைக் கவனி; இவைகள் உனது அடுத்த ஜன்மத்தில் பலனளிக்கும் காரணங்களாகையால், அவற்றை நீ மாற்ற முடியும்.

(14) மனத்தளர்ச்சிக்கும் சோகத்திற்கும் நீ இடங்கொடுக்காதே. அது எப்பொழுதாவது வருமானல், அதை உடனே நீ விரட்டிவிடு.

(15) நீ பிரவேசித்திருக்கும் மார்க்கத்திலிருந்து ஒரு நிமிஷங்கூட வேறொன்றை நாடி நீ திரும்பலாகாது.

(16) உன் முன்னிலையில் நீ ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய முக்கிய தர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்வதேயாம்.

(17) மேன்மார்க்கத்திற் செல்லுவதில், நீ ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லாதபடி, உன் முன்னேக்கத்தையே நாடியவனுயிருக்கவேண்டும். இங்குமங்கும் திரும்பி அதனின்று விலகுதல் உதவாது.

(18) நீ மேன்மார்க்கத்தில் செல்ல வேண்டுமானுல் உன்னுடைய திடசங்கல்பமானது துவைக்கப்பட்ட எஃகு போல் இருத்தல் வேண்டும்.

(19) அம்மார்க்கத்துடனே நீ ஒருமைப் படல் வேண்டும்.

(20) நீ தொடும் எக்காரியத்தையும் உன் பூரணமான திறமையுடன் செய்துமுடி.

(21) நீ திடசங்கல்பம் கொள்ளுவாயானுல் உன்னுல் செய்து முடிக்கக்கூடாதது ஒன்றுமில்லை.

(22) நீ குருநாதனை ஒருதரம் தரிசிப்பாயானுல், நீ அவரிடம் பல ஜன்மங்களுக்கு பூர்ண நம்பிக்கையுள்ளவனுய் நிகழ்வாய்.

(23) நீ அவரைப் பார்த்திராவிட்டாலும், அவரை சாக்ஷாத்கரித்து அவரிடத்தில் அபயம் புகுவாயாக. இன்றேல் அவரும் உனக்கு உபகரித்தல் சிரமம்.

(24) குருநாதனிடத்தில் பூர்ணமான நம்பிக்கை இல்லாவிடில் அவரது அன்பும் சக்தியும் உனக்குப் பெருக மாட்டா;

(25) உன்னுடைய குருநாதனிடத்து நீ பக்தியோடு விளங்குவதுடன் உன்னிடத்தும் தைரியம் கொள்ளவேண்

டும். உன்னை நீ நன்றாய் அறிந்துவிட்டதாக எண்ணுதே. அப்படியானல், அதுவே உன்னை நீ நன்றாய் அறிந்து கொள்ளவில்லையென்பதற்கு போதுமான சாக்ஷியமாகும். பொதுவாக, சேற்றில் புதைந்து வெளிப்பார்வைக்குத் தேங்காய் போல் காணப்படும் கொட்டாங்கச்சியைப் பார்த்து மயக்கமுறுகிறாய்.

(26) நீ ஈசுவரனின் ஒரு பொறியாவாய்.

(27) சர்வ பராக்ரமசாலியான ஈசுவரன் உன்னிடமிருப்பதால் நீ சங்கல்பித்து செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை.

(28) நீ பின்வருமாறு அடிக்கடி சிந்தித்தல் விசேஷ பலனைத்தரும். "ஒரு மனிதன் செய்தகாரியத்தை இன்னொரு மனிதனும், செய்யக்கூடும். நானும் ஒரு மனிதனே. ஈசுவராம்சமும் என்னிடத்தில் உள்ளது. நான் இதைச் செய்யக்கூடும், இதைச் செய்தே முடிப்பேன்."

(29) சூரியகாந்தி சுத்தஸ்படிகத்தின் மூலமாய் எப்படிப் பிரகாசிக்குமோ அப்படியே சத்தியமானது உன் மூலமாய் பிரகாசிக்கட்டும்.

(30) கர்வத்தைத் தவிர்மின். ஏனெனில் அது அறிவின்மையால் ஏற்படுகின்றது.

## ஜூலை மாசம்.

மாசாந்தர அப்பியாசம்:—ஈசுவரனுடன் ஐக்கியப்பட இச்சிப்பதே அன்பு. நீ ஈசுவரனிடத்து அத்யந்த பக்தியுடையவனானல், அவர் மார்க்கத்தை அநுசரித்து அவர் செய்வதுபோல் செய்யவேண்டும்.

## வார அப்பியாசம்.

1-வது வாரம்:—எந்த உயிர்க்கும் ஒருவித ஹிம்சையும் செய்யாதிருக்கக் கருத்துக்கொள்.

வம்புப் பேச்சு, கொடுஞ்செயல், மித்திபாசாரம் இம் மூன்று பாபகார்யங்களையும் நீ விலக்கவேண்டும். அவைகள் ஜீவபூதங்களின் விகாஸமுறைக்குத் தடை செய்பவைகள். ஏனெனில், அவைகள் அன்புக்கு நேரெதிரிடையான குற்றங்கள். ஆகையால், எப்போதும் ஈசுவர பக்தியானது தன் ஹிருதயத்தில் பரிபூர்ணமாயிருக்க விரும்புவோன் இம்மூன்று தீக்குணங்களும் தன்னை அணுகாதபடி விழிப்பாயிருக்கவேண்டும்.

2-வது வாரம்:—வம்புப்பேச்சு எவ்வளவு இழிவும், கொரேமுமான பாபம் என்பதை அறிய முயல்வாயாக.

(1) அதை நீ முற்றும் விலக்கவேண்டும்.

(2) ஒருவரைப் பற்றியும் கெடுதலாய்ப் பேசாதே.

(3) எவரேனும் பிறரை இகழ்ந்து பேசுவாராயின், நீ செவி கொடாதே.

(4) நீ அத்தகையருக்கு சாந்தமாய்ப் பின்வருமாறு சொல்லலாம்:—"நீ சொல்வதொருக்கால் நிஜமல்லாமலிருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட, அதைப்பற்றி நீ பேசாதிருப்பது நலம்."

(5) எவனைப் பற்றியாவது நீ ஏதாவது சமாசாரம் கேட்டால், நீ அதை வெளிப்படுத்தாதே. அது பொய்யாயிருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட அதைப்பற்றி நீ ஒன்றும் பேசாமலிருப்பதே நல்லது.

(6) பிறர் செய்யுங் காரியங்களுக்கு நீயாக ஒரு கருத்தைக் கற்பிக்காதே. அதாவது இன்ன உத்தேசத்தைக் கொண்டு செய்திருக்கலாம் என்று, உன் எண்ணம் போனபோக்குப்படி ஒரு காரணங் கல்பிக்க முயலாதே.

(7) மற்றவர்களைக்குறித்து உனக்குத்தெரியாத விஷயங்களில் நீ அபிப்பிராயங் கொள்ளலாகாது.

3-வது வாரம்:—பிறருக் குதவிசெய்ய எப்பொழுதும் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பரோபகார கைங்கர்ய விருப்பம் உன்னிடம் பரிபூர்ணமாய் ஏற்பட்டு, அதனால் உன்னைச் சுற்றுமிருக்கும் மனிதர்களுக்கு மாத்திரமல்லாது, புல்பூண்டு மிருகம் முதலிய ஜீவஜந்துக்களெல்லாவற்றிற்கும், சதா சமயம் பார்த்திருந்து நீ உதவி செய்து வரவேண்டும். இவ்வுதவி ஒவ்வொருநாளும் சிறிய விஷயங்களிலேயே ஏற்படவேண்டும். அதனால் பரோபகார வழக்கம் ஏற்பட்டு, அபூர்வமாய்ப்பெரிய காரியம் சம்பவிக்கும்பொழுதும் நீ அதை விட்டுவிடாது அங்கீகரிக்க இயலுவாய்.

4-வது வாரம்:—ஈசுவரன் அன்பே யாதலால், நீ ஈசுவரனுடன் ஐக்யப்பட விரும்புவாயாகில், நீயும் பூர்ணமான அன்பையும் பிறர் நலத்தையுமே கருத்திற்கொண்டு நடைபெறவேண்டும். இந்த குருசிஷ்ய மார்க்கத்திற் பயிலுவோன், தன் ஹிருதயத்தின் மூலமாக உலகெங்கும் ஈசுவரனின் அருட் பிரவாஹத்தைப் பெருகச்செய்யும் ஜீவிதமான அக்நி ஜ்வாலைபோல் நிகழ்வான்.

5-வது வாரம்:—நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாகவிருக்கவேண்டும்.

எல்லோரையும் சாந்தமாகவே நிதானிப்பாயாக.

சாந்தமாய்ப் பேசு.

சாந்தத்துடன் ஒருவனுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்.

### தினசரி அப்பியாஸம்.

(1) எல்லாச் சாதனங்களிலும் அன்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில், அது ஒரு மனிதனிடம் போதிய பல

முள்ளதாயிருக்குமாயின், மற்ற நற்குணங்களை யெல்லாம் சம்பாதித்துக் கொள்ளும்படி அவனைத் தூண்டுகின்றது.

(2) தினசரி பிரவிர்த்தியில், இதற்கு இரண்டு வித பிரயோகம் (1) எந்த உயிருள்ள வஸ்துவுக்கும், ஒரு ஹிம்சையையும் செய்யாதிருக்கக் கருத்துக்கொள்வது, (2) எப்பொழுதும் பிறர்க்குதவி செய்ப சமயம் நோக்கி நிற்பது.

(3) பரோபகாரம் செய்வதில் தீவ்ரமாய் உழைக்க வேண்டும். சந்தர்பம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். பரோபகார கைங்கரிய விருப்பம் உன்னிடம் பரிபூர்ணமாயேற்பட்டு, அதனால் நீ நிறைந்தவனாய், உன்னைச் சுற்றுமிருக்கும் மனிதர்களுக்கு மாத்திரமல்லாது, புல்பூண்டு மிருகம் முதலிய ஜீவஜந்துக்களெல்லாவற்றிற்கும், சதாசமயம் பார்த்திருந்து நீ உதவி செய்துவரவேண்டும். இவ்வுதவி ஒவ்வொருநாளும் சிறிய விஷயங்களிலேயே ஏற்படவேண்டும். அதினால் பரோபகார வழக்கம் ஏற்பட, அபூர்வமாய் பெரியகாரியம் சம்பவிக்கும்பொழுதும்,நீ அதை விட்டுவிடாது அங்கீகரிக்க இயலுவாய்.

(4) துக்கத்தாலாவது வேறு சங்கடங்களாலாவது அல்லது கிலேசங்களை யடைந்தாவது, வேறு ஏதாவது ஸஹாயத்தை விரும்பியாவது மனச் சஞ்சலப்பட்டுக் கொண்டு பலர் இருக்கின்றார்கள். பிரதிதினமும் அத்தகையரொருவரைப் பற்றி நினைத்து, அவர் பேரில் அமிருத வர்ஷம் போன்ற உன் அன்பைச் செலுத்து.

(5) உதவி செய்யும் பொருட்டு உன் அன்பின் சக்தியைப் பெருகச் செய்வாயானால் பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் அதற்குப் பலன் நிச்சயமாய் இருந்தே தீரும். ஈசுவர ஆக்ஞையை அல்லது அவர் நியதியை நீ அறிவாயானால்,

நீ செய்யும், உதவிக்குப் பலன் உண்டென்பது உனக்குத் தெரியும்.

உலகத்தின் கண் உனக்கு அன்பிருக்குங் காரணத்தால், உன்னை நீ அதற்கே அர்ப்பணம் செய்துகொண்டு லோகோபகார கைங்கர்யங்களில் நீ பிரவிர்த்திக்கவேண்டும்.

(6) மேன் மார்க்கத்திலேறும் மனிதன் ஜீவிப்பது தனக்காகவல்ல, பிறருக்காக. அவன் தன்னை மறந்தவனாகி பிறருக்கு உபகாரம் செய்வதிலேற்படுகிறான்.

(7) எல்லாரிடத்தும் அன்புள்ளவனாயும் சாந்தமுள்ளவனாயும் க்ஷமையுள்ளவனாயும் இரு.

(8) உலகத்தில் மற்றெல்லாவற்றையும் பார்க்கிலும் அதிககொடியவையான மூன்று பாபச்செயல்கள் உள்ளன. வம்புப்பேச்சு, கொடுஞ்செயல், மித்தியாசாரம், இவைகள் அன்புக்கு விரோதமான பாபங்களாகையால் எல்லா அபிவிருத்தியையும் கெடுத்துவிடும்.

(9) வம்புப்பேச்சு, முதலில் கெட்ட எண்ணம் தோன்றிய பிறகே ஆரம்பிக்கிறது. அதுவே ஒரு பாதகம்.

ஏனெனில் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வஸ்துவிலும் நன்மையும் இருக்கிறது; அவ்விதமே தீமையும் நிற்கின்றது, நமது சித்தவிர்த்திப் பிரயோகத்தால், இவ்விரண்டையும் நாம் விருத்தி செய்யலாம்.

இவ்விதமாய் ஜீவபூத விகாஸத்திற்கு நாம் அநுகூலமாயாவது, விக்கினமாகவாவது ஏற்படலாம்.

நாம் ஈசுவர சங்கல்பத்தை அநுசரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம். இது மிக இழிவுள்ளதும் கோரமுமான பாபச் செயல்.

(இன்னும் வரும்)

கே. எஸ். இராமச்சந்திர ஐயர்.

129

# என் நிஜ அநுபவம்.

---

தற்காலத்தில் இந்தியர்களின் பொதுநல அபிவிருத்தியைக் கோரி மேன் மேலும் தீவிரமாய் உழைக்க ஆரம்பிப்பவர் எவரும் தம் அநுபவத்தில் கூர்ந்து கவனித்திருக்கக் கூடிய விஷயம் ஒன்று உண்டு. அஃதாவது எவ்விதம், ஏக வஸ்துவின் தாரண சக்தியால் உலக முழுவதும் நிரம்பி விளங்குகின்றதோ, அவ்விதம், நம்தேசத்தின் ஐஹிக க்ஷேமத்திற்குரிய துறைகளாகிய, வர்ணாசிரமதர்மங்கள், கல்வி முறை, கைத்தொழில் முறை, நாகரீகம், ஜனங்களுடைய சீலம், வியாபாரம், ஸ்திரீகளின் நிலைமை, குழந்தைகளின் நிலைமை, ஸுகாதார விஷயங்கள், ஜனங்களுக்கு விச்ராந்தியை ஏற்படுத்தக்கூடிய கலா சாஸ்திரங்களான ஸங்கீதம், நாடகம், கவித்வம், சிற்பம், முதலிய எல்லாவற்றையும் உயிர்ப்பிக்கவேண்டிய, உத்ஸாஹ சக்தியானது இப்போது குன்றியிருக்கிறது. அச்சக்தி என்னவென்று பார்ப்போமானால், அதுதான், மதம் என்று நாம் இலகுவாய் அறிகிறோம்.

மதம் என்றால் நம்மவர் பலர், பஸ்ம ருத்திராக்ஷம் அணிதல், காலையில் சரீரசுத்தி செய்தல், சுத்தவஸ்திரங்களை அணிந்து தீர்த்தமார்ஜனாதிகளாலும் பத்திர புஷ்பார்சனைகளாலும் ஈசுவரனை வழி படுதல் இவை மாத்திரம்தான் என்றும், மதமானது தம்முடைய பிரதி தினசரியையில் சுசீலர்களாயும் பரோபகாரிகளாயும், திரிகாணங்களிலும் புனிதர்களாயும், நடை பெறும்படி வற்புறுத்துகின்றதில்லை என்றும், நம்பி வருகிறார்கள். மேற்கூறிய பாஹிய சௌசம் ஸ்தூல சரீரத்தை மட்டும் சுத்தி செய்ய வல்லதாகும்.

அஹிம்சை, சத்தியம் முதலிய தர்மங்களை ஆசரித்தலே ஆத்மசுத்தியைப் பயக்கும். நமது ஸ்தூலசரீரத்திலாயினும் மற்றெந்த ஸ்தூல வஸ்துக்களிலாயினும் அழுக்குப்படிந்தால் கண்ணால் நேரே பார்க்கிறோம். உடனே அதைப் போக்கடிக்கவும் முயலுகிறோம். நேரே பார்க்கும், இந்த அசுசியைக்கூட கவனியாத பல அறிவிலிகளும் உளர். மனோசரீரங்களில் நம்முடைய அசுத்தமான சிந்தனைகளால் ஏற்படக்கூடிய கோரமான களங்கத்தை நாம் நேரே கண்ணுறாதவர்களாகையால், நம்மவர்களுடைய வைதிக கோஷ்டியில் பெரும்பான்மையோர் மதத்தின் உடற்பாகமான பாஹ்ய சௌசத்தையுங்கூட அரைகுறையாய் உணர்ந்து, உயிர்ப்பாகமான ஆத்ம சுத்தியை முற்றிலும் அலக்ஷியம் செய்கின்றனர். கர்ணகடூரமான வார்த்தைகளால் தாமே பெற்ற பிள்ளைகளை வைகிறார்கள். அடங்காக் கோபத்தால் அடிக்கவும் அடிக்கிறார்கள். இதே கோபத்தை தன் மனத்தாலுங் காட்டிப் பிறரிடத்து பொறுமைகொண்டு பிறருக்குக் கெடுதலை விரும்புகிறார்கள். இவ்விஷயத்தில் நமது பிரஹ்மக்ஞான தர்சனம் மனிதன், ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களைப்பற்றி போதிக்கும் தத்வோபதேசங்கள் யுக்தி பூர்வமாகவும் பிரத்தியக்ஷாநுபவ சித்தமாகவுமே உண்மைகளை அறியப் பழகி வந்திருக்கும், தற்காலக்கல்வியிற் பயின்றோர்களென்று கருதப்படும் ஆங்கிலம் கற்றோர்களுடைய ஸம்சய விபரீதங்களை முற்றிலும் நீக்குகின்றன. லௌகிகமான அந்தஸ்திலும் படிப்பிலும் எவ்வளவோ சிறந்தவர்களாயிருப்பவர்களும் பிரஹ்மக்ஞான தர்சனம் விவரிக்கும் இம்முறையை லௌகிக அந்தஸ்தில் அற்பனான என்னிடமிருந்து கேட்டுப்பலர் தேறியிருக்கின்றனர். ஆயினும் லௌகிகர்களில் பெரும்பான்மையோர் முற்கூறியபடி உயிரற்ற

உடலைத் தழுவுகின்றாராகையால் எவ்விஷயத்திலும் நாம் உயிர்ப் பாகத்தையே அவர்களுக்கு எடுத்து உரைக்க, கடன் பட்டிருக்கிறோம்.

இம்முறையில், இந்தியர்களுக்கே ஒரு பொதுவான மதமாக ஸ்வதேசாபிமானத்தை எடுத்துரைக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். நம்மிந்தியாவில் உள்ள ஏராளமான மதவேற்றுமைகளும், ஜாதிவேற்றுமைகளும், இதரமான ஆசாரவேற்றுமைகளும், "ஸ்வதேசக்ஷேமம்" என்ற பொது நோக்கம் முன்வர, குன்ற ஆரம்பித்து, ஒற்றுமையே விருத்திபெறுகின்றது. ஒவ்வொரு மதமும் ஒற்றுமையுணர்வைப் பெருக்குவதற்கன்றோ உலகில் ஏற்பட்டிருக்கிறது!

நம் தேசத்தில் இப்போது தர்மம் மிகக் குன்றியிருக்கிறதென்றும், அதனல் ஒற்றுமை முன் வருகிறதில்லையென்றும் மேலே பார்த்தோம். பகவத்கீதை கூறும்வண்ணம், சமீபகாலத்தில் அவதாரம் நிசமுமென்றும், அச்சமயம் அவதார புருஷரைத் தெரிந்துகொள்வது சிரமமென்றும் நாம் அறியற்பாலர். இவை கீழ்வரும் சுலோகங்களால் நன்குவிளங்கும்.

தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ।
அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாஶ்ரிதம் ।

பகவத்கீதை.

ஆகையால் எங்கும் நிறைந்த பரிபூர்ணவஸ்துவையுணர்ந்து, வெளிவேற்றுமைகளைப் பாராட்டாமலும், வெளிவேஷங்களைப் பார்த்து ஏமாந்துபோய்ப், பிறரை நல்லவர்களென்றாவது, கெட்டவர்களென்றாவது இன்னும் வேறு பலவிதங்களிலாவது, தவறாய் நிதானிக்காமலும், பிறர் துன்பந்துடைத்தலில் அஜாக்ரதையாக இராமல் தீவ்ரமான ஊக்கங்கொ

ளுமம்படியும், பிறர் மதங்களிலும், பிறர் வழக்கங்களிலும் பிறர் அபிப்பிராயங்களிலும் குறை கண்டு வைஷம்யத்தைப் பெருக்காமல், தமக்காகவேண்டிய குணத்தை மட்டும் கொள்ளும்படிக்கும், ஒவ்வொருவரும் அவரவர் பற்பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்காய்ச் செய்வதோடு எந்த அற்பகார்யத்தையும் மிகச்சிரத்தையுடன் தம்மால் இயன்றமட்டும் அழகுறச் செய்யும்படிக்கும், இவைகளனைத்தையும் ஈசுவரார்ப்பணமாகச் செய்யும்படிக்கும், பழக்க முயலுவோமாகில், நமது தேசத்தில் தர்ம ஸ்தாபனார்த்தம் இன்னொரு கிருஷ்ணமூர்த்தி அவதரிக்கும்போது அவரைத் தெரிந்துகொள்ள இயலுவோம்.

ஓர் ஸ்வதேசாபிமானி.

---

## புத்தகவரவு.

---

**சேரன் செங்குட்டுவன்:**—இப்புத்தகம், முன் செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்து, இப்போது தமிழ் லெக்ஸிகன்ஆபீஸில் பிரதம பண்டிதர் உத்யோகத்தில் அமர்ந்திருக்கும், இராமநாதபுரம் மகா-ா-ா-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களால் எழுதப்பட்டது. இவ்விஷயத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்து உப அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந். S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள் பேருதவியும் புகழத்தக்கது. இப்புத்தகம், சேரவம்சத்துதித்த **செங்குட்டு** வன் என்ற ஓர் அரசனைப்பற்றிய சரிதம். இதில் அவனுடைய பராக்ரமமும், மஹா சுத்தவீரன் என்று அதிசியிக்கும்படியாக, பகையரசர்களிடத்தும் அவன் நலங்கண்டு மகிழ்ந்தஉதாரகுணமும், பிரஜைகளைப் பரிபாலனஞ் செய்யும் முறைமையில் அவன் நன்குணர்ந்த உத்தரவாதங்களும், அவன் மந்திரிகள் முதலியஉத்யோகஸ்தர்கள், ஸைந்யங்கள் இவைகளைப்பற்றிய விவரமும் இன்னும் பல அம்சங்களும் தக்க மேற்கோள்களுடன் நமது வித்வானால் இனிய, எளிய, செந்தமிழில் நன்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்

தைத் தமிழ் நாட்டாரின் பிராசீன நாகரிகத்தை வெளியிடக்கூடிய சரித்திர புஸ்தகங்களோடு கணக்கிடல் தகும். புஸ்தகம் உயர்ந்த பேதர் வெயிட் காகிதத்தில் தெளிவான பெரிய அக்ஷரங்களில் சுத்தமாய் அச்சியற்றப்பட்டுள்ளன. இதன் விலை ரூ 1 தான். வேண்டுவோர் மதராஸ் தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்பிரதமபண்டிதர்பிரஹ்மஸ்ரீ மு. இராகவ ஐயங்காரவர்கட்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்,

ஸ்ரீ திரிபுரா ரகஸியம்:—இப்புத்தகம் ஹாரிதாயினரென்னும் மஹரிஷியால் வடமொழியில் அருளப்பட்டது. இது வி. ஆர். ஸுப்ரஹ்மண்ய ஐயரால் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. கிரௌன் ஸைஸில் சுமார் 400 பக்கங்கொண்ட புஸ்தகமிது ஞான காண்டமானது இதில் ஹேமசூடோபாக்யானம் என்ற கதை ரூபமாக விளக்கப்பட்டுள்ளது. இது இனிய தமிழில் தெளிவான அக்ஷரங்களில் இயற்றப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 1-10-0 வேண்டுவோர் P. R. ராமையர் அண்டு கோ, பிரிண்டர்ஸ், மதராஸ் என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

குருசிஷ்ய ஸம்வாதம்:-இது கடலூர் O.T. மைத்ரேய லாட்ஜ், பிரஹ்மஞான ஸபையாரால் வெளிவந்த ஓர் துண்டுப் பத்திரிகை. இது P. L. ஜேவிங், F. T. S. அவர்களால் எழுதப் பெற்றது. இதில் பிரச்னோத்தர ரூபமாக, ஞானவிசாரம் வரைந்துள்ளது. வேண்டுவோர் மேற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு விலையொன்றும் விதிக்கப்படவில்லை.

புகையிலையினால் வருங்கேடு:-இதுவும் மேற்படியாரால் வெளிவந்துள்ள ஓர் பத்திரிகை. நம்மவர்க்கு மிகப்பயன் தரக்கூடியது இத்தகைய சிறு குற்றங்களையெல்லாம் தவிர்த்து வாழ்வதற்கு நம்மவர் பழகிக்கொள்ள வேண்டியது இக்தருணத்தில் மிக அவசியம். இதைப்பலரும் வாங்கிப்படிக்கவேண்டுமென்பது நம் பிரார்த்தனை.

வியாஸத் திரட்டு:—இது மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக் கவிராயரால் எழுதப் பெற்றுள்ளது. இது பொதுவாக இந்துக்களுக்கும், சிறப்பாகச் சைவர்களுக்கும் பிரயோஜனகரமான புஸ்தகம். இது நல்ல கடிதத்தில் தெளிவான அக்ஷரங்களால் அச்சியற்றப்பட்டுள்ளது. 12 வியாஸங்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணு 8. வேண்டுவோர் மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலை வித்தியாபாநுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சமாசாரம்.

ஆத்தங்குடி பிரஹ்மக்ஞான ஸபையின் வருஷோற்சவமும், ஸரஸ்வதீ விலாஸ ஸபையின் புதிய ஆண்டு நிறைவும்:—இம்மீ 14, 15உகளில் இவ்வுற்சவங்கள் கோலாகலமாய் நடைபெற்றன. ... ஆத்தங்குடியில் அதிவிமரிசையாய் நடைபெற்றன.

முதல்நாள் ஸரஸ்வதீ விலாஸ சபையின் வருஷோத்ஸவம் புதுக்கோட்டை போலீஸ் டிப்டி சூபெரிண்டெண்டெண்ட் பிரஹ்மஸ்ரீ A. G. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் அக்ராஸனத்தின்கீழும், மறுநாள் பிரஹ்மக்ஞான ஸபையின் வருஷோற்சவம் மதுரை ஹைக்கோர்ட் வக்கீல் பிரஹ்மஸ்ரீ வி. இராமச்சந்திர ஐயரவர்களின் அக்ராஸநத்தின் கீழுமாக நடந்தன. மதுரைக் காலேஜ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களும், மதுரை தமிழ்ச்சங்க வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ ஹரிஹர ஐயரவர்களும், முன்னவர் அன்பு, பெரியார் பெருமை என்ற இரண்டுவிஷயங்களைப் பற்றியும் பின்னவர் ஒற்றுமையைப் பற்றியும் அழகாய்ப் பேசினர். P. குமரப்ப செட்டியார் "ஸத்துரு சாணகீழற் பிரபாவத்தைப்பற்றி நன்கு பேசினர். அதாவது சாமானியர் சிறியதென்று அலக்ஷியம்செய்து, பெரிய தீப்பலன்களை விளைக்கக்கூடிய அற்பகுற்றங்களை யெல்லாம் எவ்விதம் களைதல்வேண்டும் என்ற விஷயத்தை, எல்லோரும் தெளிவுறும்படி பேசினர். மதுரை பிரஹ்மக்ஞான சபையாருள் ஒருவரான B.S. ராமசுப்பையர் "ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தைப் பற்றியும்," உதயதிசை நக்ஷத்திர ஸங்கத்தைப்பற்றியும் பேசினர். இரண்டு அக்கிராஸநர்களும், தற்காலத்தில் நகரத்தார் புதிய நாகரிகத்தை விரைந்து கைப்பற்றி வருகின்றமையைப்பற்றி ஸந்தோஷித்தும், ஈசுவரகிருபையையும் மஹான்களின் கிருபையையும், நகரத்தாரின் அபிவிருத்திக்காகப் பிரார்த்தித்தும், செட்டிநாடுகளில் நடைபெறும் எல்லா தர்மங்களும் வித்யாதானத்திற்கடுத்தபடிதான் என்றும் வற்புறுத்தினர். அதற்கநுகூலமாக பிரஹ்மஸ்ரீ வி. இராமச்சந்திர ஐயரவர்கள், "கல்விகற்பித்தல் ஈசுவர கைங்கர்யம்", என்ற மஹாகிரந்தத்தினின்று பல ஸாரமான கருத்துக்களையும் வெளியிட்டனர். இந்த பிரஹ்மக்ஞான கிளைச்சபையானது, ஜீவ காருண்ய கோர்ட்டு, ஒன்று நடத்தி தன வைசியர் பலரை மாம்ஸ

வர்ஜ்யம் செய்யும்படிக்கும், பெண்கல்வியை விருத்தி செய்யும்படிக்கும் உற்சாக மூட்டி வருகின்றது. உதயதிசை நக்ஷத்ர ஸங்கத்தின் பக்தர் பலர் அங்கே இருக்கிறபடியால், வருங்காலத்தில் அதி சீக்கிரம் அவ்வணிகநாடு இஹபரக்ஷேமம் இரண்டிற்கும் நிலயமாக அமையும்.

---

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபை 7-வது மீட்டிங்.ஷை சபை ஹாலில் நாளிது 17-8-15-ல் இரவு 9-மணிக்கு இவ்வூர் சைவபாநுக்ஷத்திரிய செக்கண்டெரி ஸ்கூல் மாஸ்டர் மகா-ா-ா-ஸ்ரீ கனம் ஞானசேர்வாத நாடாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஷை மீட்டிங் அதிவிமரிசையாய் நடைபெற்றது. பல முக்கியஸ்தர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். முந்திய மீட்டிங்கில் வந்திருந்த ஜனங்களைக் காட்டிலும், இம்மீட்டிங்கில் அநேக ஜனங்கள் திரளாய் வந்திருந்தார்கள்.

கனம் செ. ப. வெயிலுமுத்து நாடாரவர்கள் கடவுள் வணக்கமும்.கனம்ச.ச.பழனிச்சாமிநாடார் அடக்கம் என்பதைப்பற்றியும் கனம் ப. வ. முத்துராமலிங்க நாடாரவர்கள் பொறுமையைப்பற்றியும், கனம் தி. ரு. கி. தில்லைக்கோவிந்த நாடாரவர்கள் பொது நலத்தைப்பற்றியும், கனம் கு. சத்துரு சங்காரவேல் நாடாரவர்கள் விவசாய நன்மையைப்பற்றியும், கனம் சு. ஆ. முத்து நாடாரவர்கள், ஏனுதியன்பன் ஆகியவர்கள் முயற்சியைப்பற்றியும் உபந்நியாசஞ் செய்தார்கள். இவ்வூர் சைவபாநுக்ஷத்திரிய செக்கண்டெரிஸ்கூல் அஸிஸ்டண்டு மாஸ்டர் கனம் எஸ். நாகலிங்கஞ் செட்டியாரவர்களும் முயற்சியைப் பற்றியே வெகு விஸ்தாரமாக நீண்ட உபந்நியாசஞ் செய்தது நிரம்பவும் மெச்சத்தக்கதாயிருந்தது. கனம் ஆ. சொக்கலிங்க பாண்டியரவர்கள் கைத்தொழில், கல்வி, ஒற்றுமை, இராஜபக்தி முதலியவற்றிற் கிலக்காக ஒரு அச

சாபீஸ் கூட்டுறவாக வைத்து நடத்தவேண்டுமென்றும், அதற்குப் பெயர் மாட்சிமை தங்கிய கவர்னர் ஜெனரல் லார்ட் ஹார்டிஞ்சி அவர்களின் ஞாபகசின்னமாக "ஹார்டிஞ்சி" என்று கொடுக்கவேண்டுமென்றும், சென்னை கனம் ச சு சங்கரலிங்க நாடாரவர்களை மானேஜராய் நியமிக்கவேண்டுமென்றும் பிரேரேபித்து கனம் அம்பலம் குளிமுத்து நாடாரவர்கள் ஆமோதிக்க கனம் ச வள்ளிநாயக நாடாரவர்கள் ஆதரித்துப் பேசினார்கள்.

பின்பு அவ்வச்சாபீசுக்கு அதின்படியே பெயர் கொடுத்து மூலதனமாக பங்கு ஒன்றுக்கு ரூ-20—0—0 வீதம் பல பங்குகள் சேர்த்துக் கூட்டுறவாக நடத்தவேண்டுமென்றும், இது விஷயத்தை மாட்சிமை தங்கிய கவர்னர்ஜெனரல் அவர்களுக்குத் தெரியப் படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கனம் ச. வள்ளிநாயக நாடாரவர்களால் பன்னூற்றிரட்டு என்னும் புஸ்ககம் ஒன்றும் கனம் வை. பெ. வையாபுரி நாடாரவர்களால் நகைப்பைத்தியம் என்னும் புஸ்தகம் இரண்டு பாகங்களும் இச்சங்கத்திற்கு இனமாக அளிக்கப்பட்டன.

கனம் அக்கிராசனாதிபதியவர்களின் முடிவுரை முடிந்தவுடன் 1½ மணிக்கு மீட்டிங் கலைந்தது.

செக்ரட்டெரி,

நாடார் கல்விப் பிரசங்க சபை,

அருப்புக்கோட்டை.

19—8—15.

137

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. ப |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. | இயேசுகிறீஸ்துஎன்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0–12—0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10 | மௌனவாக்கு | 0—2—0 |
| 11. | ஸந்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. | மாதுஸ்ரீ அந்நிபெஸ்ண்ட் அம்மையார்சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருதமூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும்) | 0—1—0 |
| 17. | மாதுஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. | லோககுருவின் அவதாரங்கள் | 0—0—6 |
| 20. | பகவான் கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞானிகளின் சங்கம் | 0—1—0 |
| 22. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—6 |
| 23. | உதாஸீந ஸர்து ஸ்தோத்ரம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மக்ஞானமும் பிரஹ்மக்ஞான சபையும் | 0—0—6 |
| 27. | ஸந்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் | 0—1—0 |

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மக்ஞான ஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.

138

பல கண்காட்சிகளில்
மேடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பருய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

29. சவனபிராசனம்:—இம்மருந்தினுல் ஈளை, இருமல், சுவாசகாசம், க்ஷயம், தொண்டை ரணம், கபம், இன்னும் நுரைஈரலைப்பற்றிய எல்லாவித வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் தடையின்றி தீரும். இம்மருந்து பலஹீனத்தை போக்கி, தேகத்திற்கு வலுவையும், தேஜஸையும், காந்தியையும் தரும் சவனமகாருஷியவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்து கொடுக்கப்பட்டு ருஷி பாலியத்தனை யடைந்ததாக ஆயுர்வேத சாஸ்திரத்தில்கொண்டாடாடப்பட்ட சவனபிராசனம் என்னும் சிறந்த ஔஷதம். டப்பா 1-க்கு ரூபாய் 2 வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

30. மகரத்துவஜம்:—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தை தவிர வேறெந்தவகை மருந்து சாஸ்திரத்திலேயும் கிடையாது. இம்மருந்தினுல் தீராத வியாதியாவது, குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேக வியாதிகளுக்கு, இது கைகண்ட ஔஷதம். எக்காரணத்தினுலுண்டாகும் தாதுநஷ்டம், பலஹீனம், மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம், முதலிய இன்னும் அநேக மூத்திரநோய்களும் எல்லாவித சுரங்களையும், ஜலுப்ப, இரும்மல், க்ஷயம், காசம், அஜீரணம், நீர் கோர்வை, பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், சித்தபிரமை, காலரு, பிளேக், ஸ்திரீகளுக்கு கர்ப்பமா யிருக்கும்பொழுதும், பிரசவித்தபின்பும், காணும் சகல நோய்களையும், நரம்புகளின் பலஹீனம் முதலிய இன்னும் அநேகவித வியாதிகளையும் குணமாக்கும். மூளையைப் பலப்படுத்தும். இம்மருந்து தங்கம் முதலியதுகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது. விலை தோலா ஒன்றுக்கு ரூபா 24. எழுவேளை ஔஷதம் ரூபா ஒன்று. வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப் பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனிஎல்லா ஆர்டர்களும், இப்பாகத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகியதஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.